**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 152 of 2023 |
| Prosecution Witness | : | PW 6 |

23.07.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில் குமார் | Calling | : காவல் ஆய்வாளர் |
| Father Name | : செல்வம் | Religion | : |
| Village | : நடுக்காவேரி | Age | : 56 |
| Taluk | : திருவையாறு | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

__முதல் விசாரணை__

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் நடுக்காவேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.11.2022 தேதி துறையூர் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சஞ்சீவி அவர்கள் பதிவு செய்த நிலைய குற்ற எண். 333/2022 சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச வின் படியான முதல் தகவல் அறிக்கையை எனது மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டேன். அன்றைய தினம் 13.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கனகராஜ், மதியழகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் இறந்து போன கலைவாணன் என்பவர் பிரேதத்தை துறையூர் அரசு மருத்துவமனயில் உள்ள சவ கிடங்கில் வைத்து 14.30 மணிக்கு சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பிரேத பரிசோதனை செய்ய வேண்டி மேற்படி பிரேதத்தை 2ம் நிலை காவலர் 852 திரு.சுரேஷ் என்பவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் செல்வராசு, கனகராஜ், மதியழகன், தமிழ்வாணன், மதிவாணன், ஆனந்த்,

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.23 09:46:24 +0530

கபிலரசு ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்னர் 12.11.2022 நிலையம் ஆஜர் ஆன இவ்வழக்கின் எதிரி மதன் ராஜ் என்பவரை காரணம் கூறி 12.30 மணிக்கு கைது செய்தேன். பின்னர் தக்க பிணையத்தில் விடுவித்தேன். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். இந்த 14.11.2022 தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. செந்தில் குமார் அவர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்து விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களான TN 48 L 0677 TVS XL Super, TN 48 AW 3163 Mahindra Bolero Max ஆகியவற்றிற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். அவைகள் முறையே **அ.சா.6 மற்றும் 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 23.12.2022 தேதி சாட்சி பாலாஜியை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். 16.05.2023 தேதி திருச்சி தடவியல் வல்லுநர் திரு.செல்வராஜ் அவர்களை விசாரித்து இவ்வழக்கில் இறந்து போன நபரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை மேற்கொண்ட துறையூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.சோலைமேகளா என்பவரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தும் பிரேத பிரிசோதனை பெற்றேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சஞ்சீவி அவர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிக்க எதிராக சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச வின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

விபத்து நடந்த இடம் துறையூர் to ஆத்தூர் ரோடு என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகள் சம்பவ இடத்திற்கு அருகில் வசிக்கும் சாட்சிகள் இல்லை என்றும், அதே போல் வழிப்போக்கர்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் வழிப்போக்கர்கள் தான். இவ்வழக்கில் மேற்படி இரண்டு சாட்சிகளும் இவ்வழக்கில் இறந்து போனவரின் ஊரான ஒக்கரையை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் ஒருவர் தான் அவரது ஊரை சேர்ந்தவர். மற்றொருவர் செங்காட்டுப்பட்டியை சேர்ந்தவர். விபத்து நடந்த இடத்தை எனக்கு யார் அடையாளம் காட்டினார் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் சஞ்சீவி என்பவர் தான் எனக்கு அடையாளம் காட்டினார். இவ்வழக்கில் அ.சா.1 குறிப்பிட்டுள்ளது

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.23 09:46:34 +0530

போல் சம்பவ இடத்தில் விபத்து நடத்தது என்பதற்கான Tyre Mark ஏதாவது காணப்பட்டதா என்றால் இல்லை. விபத்து  நடந்த இடம் சம்பவ சமயத்தில் குறுகலான ரோடு என்றும் நான்கு வழிச்சாலை இல்லை என்று சொன்னால் நான்கு வழிச்சாலை இல்லை ஆனால் குறுகலான ரோடு இல்லை. நான் ரோட்டின் அகலத்தை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். தார் ரோட்டில் இருந்து எத்தனை அடி தூரத்தில் விபத்து நடந்தது என்பதை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழககில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான செல்வராசு மற்றும் ஆனந்தை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து தான் விசாரித்தேன். அ.சா.1, அ.சா.2 தங்களது சாட்சியத்தில் துறையூரில் திருமண நிகழ்ச்சிக்கு சென்றதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவர்கள் எங்கு யாருடைய திருமணத்திற்கு சென்றார்கள் என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அ.சா.1, அ.சா.2 விபத்தில் இறந்து போனவரின் வாகனத்திற்கு பின்னால் சென்றோம் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவர்கள் சென்ற இருச்சக்கர வாகனத்தையும் அந்த வாகனத்தின் பதிவு எண்ணையும் என்னிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அவர்கள் சென்ற வாகனத்தை யார் ஓட்டி சென்றார்கள் யார் அமர்ந்து சென்றார்கள் என்ற விவரத்தை நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் இறந்து போன கலைவாணன் என்பவரது ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ நேரத்தில் மழை பெய்ததா என்றால் அவ்வாறு எதுவும் குறிப்பிடவில்லை. சம்பவ சமயத்தில் மழை பெய்தது என்றும் இவ்வழக்கில் இறந்து போனவர் நனைந்து கொண்டே கையை கண்களில் வைத்து மறைத்து கொண்டு அவர் தான் எதிரியின் வாகனத்தின் மீது மோதினார் என்றும் இவ்வழக்கின் எதிரியின் ஆஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்து போனவரின் மனைவிக்கு விபத்து நஷ்ட ஈடு பெற்று தரவேண்டி அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று சிறப்பு உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும் அதனை நான்புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.23 09:46:46 +0530

**மறுவிசாரணை -** இல்லை.

( இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி செந்தில்குமார் காவல் ஆய்வாளர் காணொலி காட்சி மூலம் ஆஜர்படுத்த சொல்லி துறையூர் காவல் நிலைய காவலர் 1458 கொடுத்த வேண்டுதல் கடிதம் அடிப்படையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி செந்தில் குமார் காவல் ஆய்வாளர் இன்று 23.07.2026 அன்று தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள காணொலி காட்சி அரையில் இருந்து சாட்சியம் அளித்ததார். அவருடன் Co–Ordinator சி.மணிகண்டன் Programmer உடன் இருந்தார்.)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.23 09:47:01 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.